சுற்றுநிருபம்-01/2022

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாணம்
2022.04.04

வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கும்.

**கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு ரூபா.5000/= மாதாந்த கொடுப்பனவாக வழங்குதல்.**

வடமாகாணத்தில் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கும் 2022.01.01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அடிப்படை சம்பளத்துடன் சேராத வகையில் மேலதிகமாக ரூபா5000 /= மாதாந்த கொடுப்பனவை வழங்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

02.பின்வரும் நபர்கள் இந்தக் கொடுப்பனவுக்கு உரித்துடையவர்கள்.
(அ).மாதாந்த சம்பளம் பெறும் நிரந்தர/தற்காலிக/ஒப்பந்தஉத்தியோகத்தர்கள்
(ஆ).நாளாந்தம் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள்.

03. சம்பளமற்ற விடுமுறை பெற்றிருக்கும் பணியாளர்கள் இந்தக் கொடுப்பனவுக்கு உரித்துடையவர்களாகமாட்டார்கள். அரைச் சம்பள விடுமுறை பெற்றுள்ள பணியாளர்கள் இந்த கொடுப்பனவின் அரைவாசியைப் பெற உரித்துடையவர்கள்.

04. நாளாந்த சம்பளம் பெறுபவர்களுக்கு, சேவைக்கு சமூகமளிக்க வேண்டிய முழுமையான நாட்களும் சேவைக்கு சமுகமளித்திருந்தால், முழுகொடுப்பனவும் செலுத்தப்பட வேண்டும், அவ்வாறு சமூகமளிக்கவில்லையெனில், சேவைக்கு சமுகமளித்த நாட்களின் விகிதத்திற்கு ஏற்ப கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டும்.

05. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் குறித்த சுற்றறிக்கை இரத்துச் செய்யப்படும் வரைக்கும் வலுவிலிருக்குமென அறியத்தரப்படுகின்றது.

2022.02.25 ஆம் திகதிய ஆணைக்குழுவின் தீர்மானத்தின் படியானது.

த.உமா
செயலாளர்

த. உமா
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாணம்